# விமான நிலையம் – கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரயில் பாதையை நீட்டிக்க ஆய்வு

– நமது நிருபர் –

விமான நிலையத்தில் இருந்து, கிளாம்பாக்கம் வரை, மெட்ரோ ரயில் பாதையை நீட்டிக்க, மெட்ரோ ரயில் நிறுவனம் ஆய்வு நடத்த உள்ளது.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கி மலையில் இருந்து, சென்ட்ரல் வரையும், விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, ஜனவரியிலும், வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் வரை, 2020லும், மெட்ரோ ரயில் இயக்கப்பட உள்ளது.

இதையொட்டி, மெட்ரோ ரயில், இரண்டாம் திட்டத்தில், மாதவரம் – சிறுசேரி, 'சிப்காட்' இடையே, 45.81 கி.மீ., கோயம்பேடு – கலங்கரை விளக்கம் இடையே, 17.12 கி.மீ., மாதவரம் – சோழிங்கநல்லூர் இடையே, 44.62 கி.மீ., என, மொத்தம், 107.55 கி.மீ., பாதை அமைக்கப்பட உள்ளது.

மூன்று வழித்தடங்களில், நில ஆய்வு பணி முடிந்து, நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்துடன், விமான நிலையத்தில் இருந்து, வண்டலூர், கிளாம்பாக்கம் வரை, மெட்ரோ ரயில் பாதையை நீட்டிக்க, மெட்ரோ நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இப்பாதைக்கான சாத்தியக்கூறுகள் குறித்து, ஆய்வு செய்வதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன.

இப்பாதைக்கு தேவையான அரசு நிலம், தனியார் நிலம், தரைக்கு கீழ், தரைக்கு மேல், பாதை அமைக்க வேண்டிய இடங்கள் எவை என்பது குறித்து, ஆய்வு செய்து அறிக்கை வழங்க, தனியார் ஒப்பந்ததாரர்களுக்கு, மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில், அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரிகள் கூறியதாவது:

சென்னையில் போக்குவரத்து நெருக்கடியை குறைக்க, கிளாம்பாக்கத்தில், 88 ஏக்கர் பரப்பளவில், புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்பட உள்ளது.

இதனால், விமான நிலையத்தில் இருந்து, கிளாம்பாக்கம் வரை, மெட்ரோ ரயில் போக்குவரத்து நீட்டிக்கப்பட்டால், சென்னை, காஞ்சிபுரம் மாவட்டங்களில், போக்குவரத்து நெருக்கடி குறையும்.

பொதுமக்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு, மெட்ரோ ரயிலில் விரைவாக செல்லும் நிலை ஏற்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.